ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

குருவுக்கு மிஞ்சின சிஷ்யனென்று சொல்லுவதுண்டு. தற்காலத்தில் பலபேர் அப்படித் தோன்றியிருக்கின்றனர். அதனால் குரு சொல்லுவதை சிஷ்யன் கேழ்க்கவேண்டியதா? அல்லது சிஷ்யன் சொல்லுவதை குரு கேழ்க்கவேண்டியதா என்று அனேகர்களுக்கு ஸம்சயமுண்டாகிறது. ஸாக்ஷாத் பரமேசுவரன் தக்ஷிணாமூர்த்திஸ்வரூபமாய் குருபீடத்திலமர்ந்து ஸநகாதிஸூரிகளுக்கு உபதேசித்த காலந்தொடங்கி நாளதுவரையில் குரு பீடத்திலமர்ந்தவர்களது உபதேசத்தை சிஷ்யவர்க்கங்கள் கேட்டு அதன்படி நடந்து க்ஷேமத்தையடைந்துவந்தார்கள். தற்காலத்தில் அந்த குரு பீடத்திலமர்ந்தவர்களும் புதிய நாகரீகத்தை அவலம்பிக்காமல் பழைய கதையையே சொல்லிவருகிறார்களாம். அதிலிருந்து உலகத்திற்கு என்ன நன்மை கிடைக்கின்றது? என்று அவர்கள்மீது தோஷாரோபணஞ்செய்கிறார்கள். அவர்களாவது ஸனாதனதர்மத்தை வழக்கமாறாமல்உபதேசித்து வருகிறார்களேயென்று நன்றி பாராட்டாவிடினும் குற்றம் சுமத்தக் கங்கணம் கட்டுகிறார்கள். இவ்வாறு நமது ஆர்யமதத்திலுள்ளதுபோல் வேறு எந்த மதத்திலாவது உண்டா? எந்த மதத்தவனாயினும் அந்தமதக்கிரந்தங்களைப் பிரமாணமாக நம்பாமலும், அதில் கூறப்படும் கடவுளது சட்டத்தை நடத்தாமலும், அந்த மதாசார்யனது உபதேசத்தைக் கேட்காமலும் இருப்பானா? இதுவும் கலிமஹாராஜனது மஹிமை. உபநயனமானது முதல் குருகுலவாஸஞ்செய்து வேதவேதாங்காதிசாஸ்திரங்களைக் கற்று அதன் உண்மையான தாத்பர்யத்தை விசாரித்துத் தெரிந்துகொண்ட வைதிகர்களுக்கும் ஸம்ஸ்கிருதபாஷையின் வாஸனையே அறியாதவர்கள் புத்திசொல்லத் தலைப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்குத்தெரியாத வேதங்களெல்லாம் இவர்களுக்குத் தோன்றியிருக்கிறதுபோலும். பிரௌடா விவாஹத்தைப் பல வேதங்கள் கூறுவதாகக் கருதுகின்றனர். அது எந்த வேதமோ தெரியவில்லை. வேதமென்ற வார்த்தையைக் கேட்டமாத்திரத்தால் சிறுவர் மயங்கி இவரது உபதேசத்திற் செவிசாய்க்கட்டுமென்ற தந்திரமேயொழிய வேறில்லை. ஆகையால் இவைகளையெல்லாம் கேட்டு நமது ஆர்யச்சிறுவர் மயங்கிவிடாமல் நிதானித்துக்கொண்டு பிராமாணிகர் சொல்லுவதே ஹிதமென்று நம்பி அதன்படி நடந்து நன்மையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

## பராசரஸ்மிருதியும், புனர்விவாகமும்.

நாளது சுக்ல-ஹூ புரட்டாசி-மீ 2உ செவ்வாய்க்கிழமையன்று வெளிவந்த சுதேசமித்திரனில் "விவாக சம்மத வயது" என்று தலையங்கமிட்டதோர் விஷயம் ஸ்ரீமான், ஆர். கோபாலஸ்வாமி அய்யங்காரால் எழுதப்பட்டிருக்கிறது அதில் சில வார்த்தைகளைப்பற்றி கொஞ்சம் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. அதாவது— "தூதர்கள் பெண்களின் விவாஹ வயது 7, 8 ஆகத்தானிருக்கவேண்டுமென்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்வதுபோல் தெரிகிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. வைதிகர்களோ, அவர்களது பிரதிநிதிகளோ சாஸ்திர முறையை விட்டு, சுதந்திரமாக ஒரு விஷயத்தை மற்றவர் போல் பிடிவாதமாய்ச் சொல்லத் துணியமாட்டார்கள். சாஸ்திரத்தின் பிடிவாதத்தை வைதிகர்கள் வெளியிடுகின்றனரேயன்றி வேறல்ல. அதை வைதிகர்கள் பிடிவாதமாய்க் கூறுவது சரியில்லை. "நம்முடைய தற்கால அனுஷ்டானத்தில் விவாஹத்தை 7,8 வயதிலேயே நடத்தி வருகிறோமா? 12, 13 வயதுக்கு மேல் விவாஹம் செய்யப்படவில்லையா ?" என்கிறார்கள். ஏதோ சிலர் 12, 13 வயதில் விவாஹம் செய்துவிட்டால் அதுவே உலகம் பூராவும் சம்பிரதாயமாய்விடுமா? "நம் ஸம்பிரதாயத்தில் வந்திருப்பதைச்சட்டமாக்குவதில் நாம் என் ஆக்ஷேபிக்கவேண்டும்" என்கிறார்கள். இப்பொழுது கூறப்படுவது நம் ஸம்பிரதாயத்தில் வந்ததே இல்லை. ஒருவரிவர் ஆபத்தில் அனுஷ்டித்தது அது ஸம்பிரதாயமாகிவிடாது. சாஸ்திரத்திற் கொத்தபடி பல சிஷ்டர்கள் அனுஷ்டிப்பது தான் ஸம்பிரதாயமாகும். ஆகவே சிஷ்டர்களது சாஸ்திரானுகுணமான ஸம்பிரதாயத்திற்கு இப்பொழுது கூறப்படுவது விரோதமாய் இருப்பது பற்றியே வைதிகர் பிரதிநிதிகள் இதை ஆக்ஷேபிக்கிறார்கள். "ருது சாந்தி வயது கமிட்டி தீர்மானித்திருக்கிறபடி 15 ஆக இருக்க

லாம்" என்கிறார்கள். அப்படியானல் விவாஹவயது 12 ஆகத் தானிருக்கவேணுமென்று என்ன கட்டுப்பாடு. அதற்குக்கீழும் என் இருக்கக்கூடாது. பால்யத்தில் ருதுசாந்தி செய்துவிட்டால் தோஷமேயொழிய பால்யத்தில் விவாஹம் செய்துவிட்டதனல் என்ன தோஷமேற்படும். அப்படி ஒரு வைத்தியசாஸ்திரமும் சொல்லவில்லை. பால்யவிதவைகளின் ஸங்கியை குறையுமே என்றால்— பால்ய விவாஹம் பால்யவைதவ்யத்திற்குக் காரணமென்ற ஸூக்ஷ்மம் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டதோ தெரியவில்லை. பால்ய வைதவ்யதோஷத்தை விலக்குவதற்கு பால்யவிவாஹத் தடை உபாயமில்லை. அதற்கு வேறு உபாயம் நமது ஸ்மிருதிகளிலும் சோதிட நூல்களிலும் கூறப்பட்டிருப்பது முன் நமது ஆர்ய தர்மத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. "நமக்கு இப்பொழுது வேண்டுவது பிரௌடைக்கு முன் விவாஹம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானல் 12 வயது என்ற பிடிவாதம் வைதிகரல்லாதார் செய்வதும், வைதிகரைப் பிடிவாதம் பிடிப்பதாகச் சொல்லுவதும் எக்காரணத்தாலோ தெரியவில்லை. "நம்தேசத்தில் ரஜஸ்வலை சாதாரணமாய் 12 வயதுக்குமேல் ஆகிறபடியால்" என்று கூறியிருக்கிறார்கள். சில பெண்கள் அப்படியானல் அதைக் கொண்டு எல்லாப் பெண்களுமே அப்படியாவார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும். 12 வயதுக்குமேல் விவாஹ வயதைச்சட்டமாக்கினல்,12வது வயதுக்குமுன் பிரௌடையாய்விட்ட பெண்கள் விஷயத்தில் பிரௌடா விவாஹமாகத்தானே நேர்ந்துவிடும். பிரௌடையாவதற்குள் விவாஹமாக வேணுமென்று கூறும் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களுக்கு இது விரோதிக்குமல்லவா? 12 வது வயதுக்குள் பிரௌடையாவது பிரௌடையல்லபோலும். அல்லது இவர்களது ஆக்ஞைக்காக, 12 வயதுக்குள் பிரௌடையாகமாட்டார்கள்போலும். இத்துடன் விவாஹத்திற்கும் ருதுசாந்திக்கும் மத்தியில் நேரிடும் வைதவ்யத்திற்குப் பரிஹாரம் புனர்விவாஹமே. இதைக் கமிட்டியார் விட்டுவிட்டாலும் நாம் சட்டத்தில் சேர்க்கச் சொல்லவேண்டும். இப்புனர்விவாஹம் கலியுகத்திற்குப் பிரமாணமான பாராசரஸ்மிருதியில்

नष्टे मृते प्रव्राजिते क्लीबे च पतिते पतौ ।
पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥

என்கிற பிரஸித்தமான வசனத்காலும் மற்றும் அனேக ஆதாரங்களாலும் சாஸ்திரியமானது என்று சொல்லியிருக்கிறார். அய்யங்காரவர்கள்முதலில் தான்பென்ஷன்சிரஸ்தார்என்று குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி கவனிக்கும்போது அவர்கள் இவ்விதம் சொல்வதில் ஆச்சரியமடையவாவது துக்கமடையவாவது வேண்டாம். ஏனெனில் வாழ்நாளைப் பால்யத்தில் ஆங்கிலம் கற்பதிலும் பிறகு நாளது வரை ஒயும் மட்டும் ராஜாங்கத்திலேயே புத்தியை செலவழித்த நமது அய்யங்காரவர்கள் உலகத்தையும் சாஸ்திரத்தையும் எவ்வாறு கண்டிருக்கமுடியும்? பாருங்கள்! அய்யங்காரவர்கள் பாராசாஸ்மிருதி இக்காலத்துக்கு முக்யம் என்பதை எப்படியோ கண்டுகொண்டதும் அதில் ஒரு சுலோகத்தையும் படித்துவிட்டார்போலும். இருக்கட்டும் என்செய்வோம்! பிடிவாதம் செய்கிறவர்கள் என்று எங்களை குறை கூறுகின்ற இவர்கள் பிடிவாதம் செய்கிறவர்களில்லையாம். இந்த ஸ்மிருதியில் இனியாவது விவாஹப்பிரகரணத்தில் எவ்வித அபிப்பிராயத்தைப் பாராசர் வெளியிட்டிருக்கிறொன்பதை ஸம்ஸ்கிருதம் நன்கறிந்து பிடிவாதமற்ற தங்களைப்போன்ற மேதாவிகளிடமிருந்தாவது நன்கு ஆராய்ந்து பார்க்கட்டும். அவ்விதம் ஆராயப்புகின் விதவாவிவாஹம் கூடவே கூடாதென்பதுதான் பாராசரது அபிப்ராயம் என்பதை அய்யங்காரவர்களே தெரிந்துகொண்டுவிடலாம். அல்லது பாமலௌகிகத்தில் மூழ்கி ஊறி எழுந்திருந்திருக்கிற இவ்வய்யங்கார்அவர்கள் இவ்வித அனுமானம் செய்திருக்கலாம். இந்த சுலோகம் மிகப்பிரகாசமாய் அர்த்தத்துடன் பிரகாசித்துக்கொண்டிருப்பது நமது கண்ணில் பட்டதுபோல் என் முன்னோர்களின் கண்ணுக்குப் படவில்லை. ஒரு சமயம் தென்பட்டிருந்தாலும் தெளிவான இதன் அர்த்தம் படவில்லையா? சீர்திருத்தக்காரர்கள் இவ் விவாஹமசோதா கொண்டுவரப்படும்போது இதையும்தெரிந்துகொண்டு நம் யுக்தியை என் எழுதவில்லை? விதவாவிவாஹம் செய்யமுயற்சி செய்துகொண்டிருக்கும் கூட்டத்தார் இந்தசுலோகத்தை நன்கு வெளியிட்டு என் பிரசாரத்திற்குக் கொண்டுவரவில்லை என்று இவ்விதம் லௌகிக அய்யங்காரவர்கள் யோசிக்கவில்லை என்பதை இங்கு விஸ்தரிப்பதில் இப்போது பயனில்லை. இதன் அர்த்தத்தை வெளியிடுவோம். அதன் பிறகாவது அய்யங்காரவர்கள் தெளியட்டும்.

இந்த சுலோகம் தாலிகட்டியபுருஷன் இறந்தபின் விதவையான ஸ்திரீயைப்பற்றிச் சொல்லவரவில்லை. மற்று விவாஹம் என்ற அங்கியில் கன்யாதானம் என்பது முதல் அங்கம். அத்தானம் மூன்றுவிதம். வாக்தானம் என்பது முதலானது. அவ்விதம் இப்போதும் செய்கிறோம். அதை वाङ्निश्चयमुहूर्तः என்று முதலில் செய்துவிடுகிறோம். அப்போதே அக்கன்னிக்கு அவன் புருடனாய் விட்டான். இந்த நியமத்தையும் ஒரு காரணம் கொண்டும் மாற்றக் கூடாது. அதுகொண்டே ஸாவித்ரீ என்பவள் ஸத்தியவானைத் தனக்குப் புருஷன் என்று நிச்சயம் செய்துகொண்ட பிறகு நாரதர்மூலம் அவன் அற்ப ஆயுள் உள்ளவன்தான் என்று தெரிந்துகொண்டாலும் சாஸ்திரமரியாதையால் அதை மீற முடியாமல் விவாஹம் செய்துகொண்டாள். ஆகவே எவ்விதத்திலும் இதை மீற முடியாதோவென சங்கை நிகழ, இவ்வைந்து ஆபத்துக்களில் மீறலாமென்று சாஸ்திரம் இடம் கொடுத்தது. வாக்கு நிச்சயத்திற்குப் பிறகு நன்றாய் ஆலோசித்து மனோ நிச்சயம் செய்யவேண்டும். மாப்பிள்ளையைப்பற்றி தீர ஆலோசிக்கும்போது சில தோஷங்கள் வெளிவரலாம். அதில் அவன் ஓடிவிட்டதாகவும், இறந்ததாகவும், ஸன்னியாஸம் பெற்றுவிட்டதாகவும், நபும்ஸகன் என்றதாகவும், பதிதன் என்றதாகவும், தெரிந்தால் வேறு புருடனை அடையலாமென்றுதான் அர்த்தம். இவ்விதம் அர்த்தம் கூறுவானேன். தாலிகட்டியபின் இவ்விதம் ஆனவன் என்று ஏன் அர்த்தம் கொள்ளக் கூடாது என்றால், இது ஏற்காது. பாருங்கள்! இந்த 5-ஆபத்துக்கள் என்றால் உண்மையான புருடனுக்கு இதைத் தவிர வேறு எவ்வித ஆபத்து இனி நேரப்போகிறது. நஷ்டன் என்றால் காணாமற்போனவன் என்று அர்த்தம். உண்மையான புருஷன் காணாமற்போனான் என்றால் எவ்வளவு காலம் எதிர்பார்க்கலாமென்று எங்கேயாவது கூறவேண்டாமா. 12-வருஷம் ஒருவன் இருக்குமிடம் தெரியாவிடில் அவன் இறந்தானென்று உத்தரக்கிரியை செய்யச்சொல்லிவிட்டது. இது போல் மற்றவை எல்லாம் கட்டின புருடனுக்கு ஒட்டாது. இதை விரிக்கிற் பெருகுமென்று மேற்செல்வாம். ஆகவே இங்கு உண்மையான புருஷனல்ல மற்று புருஷனாக வேண்டியவனாய் நிச்சயிக்கப்பட்டவன் என்றுதான் அர்த்தம். இதையும் நாங்கள் பிடிவாதமாய்க் கூறுவதாய் எண்ணக்கூடாது. பாராசரது அபிப்பி

ராயம் அதுதான் என்பதை விவாஹப்ரகாணத்தில் பார்த்தாலே தெரியுமென்று முன்னமேயே கூறினேன். இன்னொன்றும் அய்யங்கார் அவர்கள் இங்கு கவனிக்மட்டும். पतौ என்று பதம் இங்கு இருக்கிறது. இதன் அர்த்தம் பொதுவாய் புருடன் என்று நினைக்கிறார்கள். இப்பதத்திற்கு வியாகரணரீதியாய் புருஷனாக பாவிக்கப்பட்டவன் என்று தான் அர்த்தம். உண்மையான புருடனைச் சொல்ல पत्यौ என்றுதான் வரும். இதை வியாகரணம் அறிந்த தன் சிநேஹிதர்கள் மூலமாயாவது அறிந்துகொள்ளட்டும். ஆகவே இவ்விதம் உண்மையான அர்த்தம் இருப்பதைக் கண்டுதான் நம்முன்னோர்கள் இதைக்கையாளவில்லை. இனி ஆத்திரம்கொண்டு பிடிவாதத்தினால் நமது அய்யங்காரவர்கள் உண்மைத் தெரியாமல் தவிக்கவேண்டாம். இன்னொன்று இவர்களைக் கேழ்க்கிறேன் இவர்கள் இஷ்டப்படி அர்த்தம் கொடுக்கிறசுலோகம் 12-வயதுமுதல் 15வயதுக்குள் புருஷனை இழக்கிறஸ்திரீகளைத்தான் அனுக்ரமிக்குமோ. மற்ற 15-க்கு மேற்பட்டவர்களை அனுக்கிரஹிக்கக்கூடாதென்று அய்யங்காரவர்களை ஆக்ஞைபிட்டுவிடுவார்களோ. வீணில் இதைவளர்ப்பானேன். அவர்களின் உத்தியோகத்திற்கு சாஸ்திரம் பயப்படாது. சாஸ்திரத்திற்குப் பயந்துதான் நாம் நடக்கவேண்டுமென்பதை அய்யங்காரவர்கள் தெரிந்துகொள்ளட்டும். இனி விதவைகளின் ஸங்கியையைக் கூறியிருக்கிறார். இது வெறும் கதை என்பதைப் பலதடவைத் தெரிவித்திருக்கிறோம். விரும்பினால் மீண்டும் விரிக்கிறோம். பிறகு நமக்குள் கெட்டவிபரீதம் நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உருகுகிறார். இந்த உருக்கத்தில் காசியில் நடந்த பிராமணமஹாஸம்மேளனத்தையும், பிறகு தமது மடாசாரியர்களையும் கூட இகழ்ந்து பேசுகிறார். இதற்கெல்லாம் இவர்களது மனம் உருகிவிட்டதால்தான் சற்று ஆலோசியாமல் கூறிவிட்டார்கள். இதன் உண்மையை மனம் நிலைக்குவந்த பிறகாவது யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். இனி அய்யங்காரவர்களின் வார்த்தையைக் கண்டு நடுநிலைமை உள்ள ஆஸ்திகர்கள் மயங்காவண்ணம் இங்கு எழுதினோம்.

இனி 21-9-29 சனிக்கிழமை மித்திரனில் நம் அய்யங்காரவர்கள் போலவே ராமசுவாமி அய்யங்கார் என்பார் ஒருவர் வைதிகர்களை மிகவும் ஏளனமாகவே எழுதியிருக்கிறார். அவருக்கும் இம்மொழியே தகுமென்று நிறுத்திக்கொள்வோம். சுபம்!

பத்திராதிபர்.

# விவாகமசோதாவும் நமது கடமையும்.

(௫௨௬-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு இந்தச் சட்டம்தான் தாண்டவம் செய்ய வந்தது. இதைக்கொண்டுவந்த ஸ்ரீமான் சாரதாவும் ஏதோ சாமான்யமாய்தான் கொண்டுவந்தார். அதற்குக் கொம்புசீவிப் பூக்கட்டிவிட்டார்கள் சிலர். அது அவ்வலங்காரத்துடனே கூத்தாடுகிறது. சென்ற பிப்ரவரிமாதக்கூட்டத்திலேயே இதை ஆலோசனைக்கு எடுக்கும்போது அன்று சட்டமாகாமற்செய்ய M. K ஆசார்யா, M. S. சேஷய்யங்கார் முதலியவர்கள் எதிர்த்துநிற்பதையுணர்ந்த சாரதா அவர்கள் தம்மசோதாதோற்றுவிடுமென்று பயந்துகவர்ண்மெண்டாரைநோக்கி நீங்கள் இந்த சட்டத்தைக் கொண்டுவாருங்களென்று சொல்லிவிட்டு இப்போது என்னை ஆற்றில் தள்ளப்பார்க்கிறீர்களென்று சினங்கொண்டு சீறவே அப்போது கவர்ண்மெண்டார் அச்சமயம் அவருக்கு அபயம்கொடுத்து இப்போது இது வேண்டாம், அடுத்து ஸெப்டம்பர் மீட்டிங்கில் உமக்கு அவகாசம் ஏராளமாய்க்கொடுக்கிறோமென்று சமாதானம்கூறி நிறுத்திவிட்டனர். அவ்விதமே இப்போது செப்டம்பரில் எடுத்ததும் சாரதாவுக்கு சாதகமாகவே கவர்ண்மெண்டாரே கண்டமட்டிலும் பேசிவிட்டனர். இப்போது நாம் இதைக்கேட்போம். கவர்ண்மெண்டாருக்கு இவ்விஷயத்தில் இவ்வளவு அக்கரைக்குக்காரணம் யாது? ஒருசமயம் இந்தியாவில் பால்யவிவாகத்தால் சிசுமரணமும் பாலவிதவைகளும் அதிகரிக்கின்றனர் அதனால் இச்சட்டமூலம் இதைத்தடுக்கலாம் என்று பாமகருணைதான் காரணமா? இது ஒன்று காரணம் என்றால் இது இல்லவே இல்லையென்று கூசாமல் வெளியிடலாம். ஏனெனில் உண்மையான அனுதாபம் இருந்தால் இவர்கள் செய்யவேண்டிய வழி இது. இவ்விவாகம் இந்தியாவில் யார் செய்கின்றனர்? அப்பகுதியினர் நூற்றுக்கு எத்தனைபெயர்களாகலாம்? அதனால் சமூகம் முழுமையுமே கெடுமா? அதனால் கெடுதல் விளைவது வாஸ்தவம்தானா? அவ்விதமாயின் இது எக்காலம்தொட்டு இந்தியாவில் நடைபெறுகிறது? அவ்விதம் நடத்துகிறவர்களின் வம்சம் எவ்விதம் வந்துகொண்டிருக்கிறது. அதை நடத்தாத பகுதியினரின் வம்சம் எவ்விதம் வருகிறது? அவர்களில் சிசுமாணம் இல்லையா? அவர்களின் சிசுமரணம் அதிகமா இவர்

களில் அதிகமா? இச்சிசுமாணத்திற்கு இது காரணமாகுமா? இச்சட்டத்தை யாவரும் ஆதரிக்கின்றனரா? ஆதரிக்காதவர்கள் யார், ஆதரிக்கின்றவர்கள் யார்? இவர்கள் இருவர்களும் எதைக்காரணமாய்க் கூறுகின்றனர்? இது மதவிஷயமா? இச்சட்டம் மதத்தை பாதிக்குமா? அவ்விதம் சட்டமாக்கினல் அம்மதத்தினர் வருந்தமாட்டார்களா? அதனுல் நமக்குண்டாகும் ஸாதகபாதகம் யாது? ஆதியில் பாஸுபில்லை கவர்ண்மெண்டார் ஏன் ஏற்கவில்லை என்பதாதியை அவசியம் கவனித்திருப்பார்கள். இது ஒன்றையும் கவனியாமல் இதற்கு எதிராளிகள் இருக்கிறுர்களென்று சற்றுமே லக்ஷ்யம் செய்யாமலும் அவர்கள் கூறுவதுதான் யாதென்று சற்றும் செவிசாய்த்திடாமலும் சட்டம்செய்யப்போகிறேமென்று கூறின கவர்ண்மெண்டின் நோக்கம் என்ன?

प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

"பிரயோஜனத்தை கவனிக்காமல் மூடனும் ஒரு கார்யத்தில் பிரவர்த்திக்கமாட்டான்'' என்ற நியாயப்படி பல தந்திரம் தெரிந்த கவர்ண்மெண்டார் இதில் பாடுபடுவதற்கு தகுந்தகாரணம் இருக்க வேண்டுமென்பதை ஒவ்வொரு புத்திமானும் ஊகிக்கவேண்டும்.

இன்னென்றையும் இங்கு கவனிப்போம். இம்மசோதாவுக்கு எதிரிகளாய் சிலர் வந்திருக்கின்றனரென்பதை கவர்ண்மெண்டார் தெரிந்துகொண்டவர்கள்தானே? அப்படியிருக்க எதிராளிகளான நாம் சொல்லும் பேச்சை செவிசாய்த்துக்கேட்டு அதற்கு ஏதாவது கொண்டிஸமாதானமாவது சொல்லிவிட்டு தங்கள் கார்யத்தை முடித்துக்கொள்ளக்கூடாதா? மகாராணியார் மதவிஷயத்தில் நாங்கள் தலையிடமாட்டோமென்று நமக்குக்கொடுத்த வாக்குரூபமான ஆக்ஞையை ஒலமிட்டுக்கதறுகின்றேமே, அதற்கு யாராவது பதிற் கூறினாரா? இது இந்துமதத்தை வேரோடு பிடுங்குமென்றேமே. அதைத்தான் கவனித்தனரா? இவ்வசனங்களைச் சற்றேனும் செவியில் வாங்கிக்கொள்ளாமல் கனம் கிரீரார் அவர்கள் கவர்ண்மெண்டின் அபிப்பிராயமென்றும் இது உலகிற்கு மிக நன்மையைச் செய்யுமென்று உலகிலுள்ள யாவரும் இதனையே விரும்புகின்றனரென்றும் முடிவுசெய்தனரே. இனி இவர்கள் யாரை உலகினரென்று தெரிந்துகொண்டிருக்கின்றனர்,

முக்கியமாய் அரசாங்கத்தில் கீர்த்திபெற்றவர்களே. இவர்கள் பலர் சேர்ந்து பலபல்சபைகளை ஸ்தாபித்துக்கொண்டு அச்சபைகளை ரிஜிஸ்டர் செய்துகொண்டும் ஏராளமாய் திரவியநிதியை திரட்டிவைத்துக்கொண்டு ஆங்காங்கு பிரசாரம்செய்ய மனிதர்களை அனுப்புவதும் தினசரிப்பத்திரிகைகளில் பிரதிதினமும் பிரசுரிப்பதுமாய் இருக்கிறார்கள். இத்தகையோர்களின் ஸபை பலவாறாக வெளியில் தோன்றியபோதிலும் எல்லா சபைகளுக்கும் அடிப்படையான நோக்கம் ஒன்றே, அதாவது வர்ணாசிரமதர்மத்தை வேருடன் களைந்தெறிந்து தீண்டாமை விலக்கல், கோவில் கிணறுமுதலிய பொதுஸ்தலங்களில் யாவரும் தோளுடன்தோள் கலந்துகொள்ளல் முதலியனவே. ஆகவே பெயருக்குமட்டிலும் வெவ்வேறு பெயருள்ளவை. அவ்வித சபையின் பெயராவன— 1. பிர்மஸமாஜம், 2. ஆர்யஸமாஜம், 3. ஹிந்துமகாஸபை, 4. தியஸாபிகல் ஸொஸைடி, 5. பாலஸமாஜம், 6. யுவர்களின் ஸபை, 7. மஹிலாஸேவாதலம், 8. விதவாஸபை, 9. அனாதைகளைக் காப்பாற்றும் ஸபை, இன்னும் எத்துணையோ பெயர் சொல்லமுடியாதவைகள் தோன்றி நடனமாடுகின்றன. முன்கூறியபடி இச்சபைக்காரர்கள் யாவரும் மதம் இன்னதென்று தெரிந்துகொள்ளாதவர்களும் மற்ற மதத்திற்குப்போல் நம் மதத்திற்கும் மூலமான வேதம் இருக்கவேண்டும். அதை அனுஷ்டித்து வழிகாட்டிய அவதாரபுருஷர்கள் இருப்பார்களென்றும் அறிந்துகொள்ளாத நவீன நாகரிகம் முற்றி ஆங்கிலத்தில் மூழ்கியவர்கள்தான் சேர்ந்திருக்கின்றனர். இத்தகைய ஸபையோர் ஒவ்வொரு கூட்டத்தாரும் தனித்தனியே கவர்ண்மெண்டுக்கு தந்திமூலமாயும் நேராகவும் சொல்லி இம்மசோதா சட்டமாக வரவேண்டுமென்று கதறுகிறார்கள். இவர்கள்தான் இந்துக்களென்றும் இவர்களைத் தவிற வேறாக உள்ளவர்கள் குறைந்த தொகையுள்ளவர்களாயிருப்பார்களென்றும் ஆகவே மெஜாரிடி அபிப்பிராயம் இம்மசோதாவுக்கு ஸாதகமென்றும்கவர்ண்மெண்டார் நினைத்தார்கள்போலும். உண்மையில் இதுவுமல்ல, எப்படியாயினும் இருக்கட்டும், நாம் இனிச் செய்யவேண்டிய வேலையைச்சொல்வோமென்றிறங்கும்போது புத்தி எங்கெங்கோ செல்லுகின்றது. இனி இதிலேயே இறங்குவாம்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி

## நாகப்பட்டணம்
## ஸ்காந்தபுராண ப்ரவசனம்.

இவ்வூர் ஸ்ரீகுமாரகுரு ஆலயத்தில் (ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்காசார்யஸ்வாமிகள்) அனுக்கிரஹத்துடன் வேதம், வேதாந்தம், சாஸ்திரம், புராணம், ஆகமம், ஸித்தாந்தம் முதலியவற்றில் சிறந்த வித்வானான பிரஸங்கபானு. சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்தினாதசாஸ்திரிகள் அவர்களால் 26—7—29-முதல் ஆரம்பிக்கப்பெற்று நடந்துவரும் ஸ்ரீசங்கர ஸம்ஹிதை என்கிற ஸ்காந்தபுராண காலக்ஷேபத்தில் 16—8—29-ல் ஸ்ரீபார்வதி பரமேசுவர விவாக மஹோத்ஸவமும் 15—9—29-ல் தேவசேனகல்யாணமஹோத்ஸவமும் ஆஸ்திகசிகாமணிகளான பக்தகோடிகளின் அன்பினாலும்,ஆதாவினாலும் அதிவிமரிசையாய் நடைபெற்றது. ஷை மகோத்ஸவங்களின் சிறப்பை விரிக்கில் பெருகுமென்று விடுக்கின்றேன். ஆனாலும் ஷை மகோத்ஸவ ஸம்பந்தமாய் பிராம்மணோத்தமர்களும் மற்றும் பெரும்பாலோரான சிவனேசச்செல்வர்களும் சாஸ்திரிகள் அவர்களிடத்தில் நடந்துகொண்ட மரியாதைக்கும் காட்டிய அன்பிற்கும் அளவேயில்லை. ஸ்ரீ தேவஸேனா கல்யாணமகோத்ஸவகாலத்தில் இந்நகரில் நடைபெற்றுவருகிற ஆஸ்திகசங்கங்களான இந்துமதாபிமான சங்கம், கல்விச்சங்கம், ஸ்ரீஆசார்யகைங்கர்யஸபா, வைதிக தர்மாரக்ஷணஸபா ஆகிய சங்கத்தார்கள் சென்ற பல வருடங்களாய் ஷை சாஸ்திரிகள் அவர்கள் தங்கள் சங்கங்களில் செய்த அரிய உபன்யாஸங்களை உத்தேசித்தும் சாஸ்திரிகள் அவர்களிடத்தில் விளங்கும் ஸகல சாஸ்திர ஆராய்ச்சிகளின் அறிவின் விசேஷத்தை உத்தேசித்தும் (வித்வத்பூஷணம்) என்ற பட்டத்தைச் சூட்டி ஓர் வாழ்த்துப்பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டதுடன் ஓர் அழகிய பதக்கமும் (மெடல்) கொடுக்கப்பட்டது. பின்னர் இந்நகர் சிறந்த தமிழ்வித்வானும் நீலலோசனி பத்திராதிபரும் தர்மபூஷணம் புத்தகசாலை அதிபருமான ஸ்ரீமான் ஜி. ஸதாசிவம் பிள்ளையவர்களால் ஷை புத்தகசாலை அங்கத்தினர்களின்சார்பாக மாலையும் சூட்டப்பெற்றது. ஷை சங்கங்களின் சார்பாக சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ P. S. சிவராமய்யர் அவர்களாலும், காரியதரிசி

பிரம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் அவர்களாலும், சிவனடியார்களின் பிரதிநிதியாக ஸ்ரீமான் ஷண்முகசுந்தரமுதலியார் அவர்களாலும், இதர மகாஜனங்களின் சார்பாக பிரம்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் அவர்களாலும், ஷை சாஸ்திரிகள் அவர்களுடைய வித்வத்திறமையைப்பற்றி விசேஷமாகக் கொண்டாடப்பட்டதுடன் இம்மகா ஸ்காந்தபுராணப்ரவசனம் நடைபெறுவதற்கு முக்ஷிய காரணகர்த்தர்களாயிருந்து உள்ளும்,புறமும் ஒத்தமனதுடன் ஆதரித்துவருகின்ற பிரம்மஸ்ரீ C. S. சந்திரசேகரய்யர் அவர்களுக்கும் அவருக்கு முக்கிய பக்கத்துணையாய் இருந்து உழைத்துவரும் பரமபக்தசிகாமணியாகிய பிரம்மஸ்ரீ சுந்தரேசய்யர் அவர்களுக்கும் மற்றும் இதர மஹாஜனங்களுக்கும் வந்தனங்கள் கூறப்பட்டு ஷை கல்யாணமகோத்ஸவமானது அதிவிமரிசையாய் நடந்தது.

---

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(ருo அ-வது பக்கத்தொடர்ச்சி)

## 21 அத்தியாயம்.

ஸூதர்:— கோங்கணேசரென்னுஞ் சிவனின் மற்றோர் கதையைக் கூறுகிறேனென்று உரைத்தவரும், ஸதாசிவனின் கதாமிருதத்தைத் தனக்களித்தவருமான, அப்புரோஹிதரை, அவ்விசனுடையவும் தேவியினுடையவும், உத்தமமான சரிதத்தைக் கூறுமாறுச் சோழமன்னன் வேண்டினன்.

தேவசர்மா:— இத்தஞ்சாவூரில் ஓர் வைசியப் பெண் இருந்தாள். அவள் இளமைப் பருவம் முதற் கோங்கணேசரிடம் பக்தி பாராட்டி வந்தாள். பிறகு அப்பெண்மணி யௌவனப்பருவம் அடையவே அவளுடைய தாய் தந்தையர் தக்கதோர் வைசிய குமாரனுகிய வரனை அழைத்து வந்து, அவனை மணந்து கொள்ளுமாறு தன் மகளைப் பந்துக்களுடன் வேண்டினர். அதனைக் கண்ணுற்ற அப்பெண் அழுதுகொண்டு தன் தாயை நோக்கிக் கூறலானுள்.

பெண்மணி:— நான் ஒருவரையும் மணந்துகொள்ளேன். எனக்கு ஈசனே ஏற்ற கணவன். கிழத்தனம் மரணமிவைகளை உடைய ஓர் நரனை மணவேனென்பது தீர்மானம். மதனனையெரித்த சிவனையே நான் மணந்து கொள்வேன்.

இவ்வாறு காலங்கழியவே முகூர்த்த லக்கினந்தவறிவிட்டது. அதே இரவிற் கோங்கணேசர் அவளை மணந்துகொண்டு அவள் கழுத்தில் மங்களசூத்திரத்தையுங்கட்டினார். எல்லாவித ஆபரணங்களையும் பூண்டு சோபிக்கின்றவளும், விவாஹ வேஷந்தரித்தவளுமான அப்பெண்ணை, என்றுந்தன்மை பயக்குஞ் சிவன் இரவில் அப்பெண்ணின் பந்துக்களெல்லோரும் படுத்து நித்திரை புரிகையில் இருஷிகளுடனும் தேவர்களுடனும் கூட வேதகோஷங்களுடன் அவ்வீட்டினின்றும் தன் ஆலயத்திற்கு இட்டுச்சென்று ஞானம்பிகையின் மேற்கில் அவளுக்கு ஓர் ஆலயத்தையும் நிர்மாணஞ் செய்தார்.

வணிகன் காலையிலெழுந்து, பெண்ணைக்காணாது, தேடிச் சென்று சிவாலயத்திலிருக்கக்கண்டு, அவளை வீட்டிற்கழைத்துச் செல்லவெண்ணங்கொள்ளவே அப்பொழுது ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று.

ஆகாயவாணி:— 'இவள் சங்கரனின் மனையாள். இவளை மனிதர் மணப்பது இயலாது. முன்பு தேவிபாண்டியகுலத்துதித்தது போலிப்பொழுது இங்கு சிவபக்தகுலத்துதித்தாள். மஹேசனாலும் மணந்துகொள்ளப்பட்டாள். ஏ வணிகர்களே! வீடு செல்லுங்கள்"

எல்லோரும் பார்த்திருக்கையில் அப்பெண்ணின் தலையில் பூமாரிசொரிந்தது வணிகர்களுமப்பெண்ணை தேவாலயத்திலேயே விடுத்து மிக்கக்களிப்புடன் வீடுசென்றனர். இப்பொழுதும் அச்சைவப்பெண் அச்சிவாலயத்திற் சிலாரூபமாயிருக்கிறாள். கோங்கணேசரின் அம்மனைவியை அர்ச்சிப்போர்களுக்கு வேண்டிய விருப்பத்தையளிப்பாள்.

ஏ அரசே! உனக்குக் கோங்கணேசரின் மஹிமையைக் கூறினேன். இதனைக்கேட்பவனும் படிப்பவனும் எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுவான்.

அதைக்கேட்டு வீரமார்த்தாண்டசோழன் அவ்வாலயத்திற் பக்திகொண்டான். அக்கோயிலைப் புதிப்பித்து கோபுரம் பிராகாரம் மண்டபம் முதலியவைகள் நிர்மாணஞ்செய்து வைகாசிமாதத்தில் அச்சங்கானுக்கு உற்சவமும் நடத்தினன். அம்மன்னனுக்குக் கீர்த்திசோழன் என்னும் ஓர் மகனுதித்தான். கீர்த்தியே உருவெடுத்துவந்தாற்போன்ற அம்மகனைத் தன் ஸ்தானத்தில் முடிசூட்டிவைத்து 66-வயதுவரை இராச்சியபரிபாலனஞ்செய்த அம்மன்னன் தன் மனையாளுடன் நந்திபிருங்கிகளாற் பூஜிக்கப்பட்ட சிவனையடைந்தான்.

கீர்த்திவாய்ந்த வீரமார்த்தாண்டசோழனின் புண்யகதையைக் கேட்போர் சிவஸாரூப்யமடைவாரென்பதிற் சந்தேகமில்லை.

## 22 அத்தியாயம்.

ஸூதர்:— அவ்வேந்தன் கைலாஸஞ்சென்றதும் அவன் குமாரனாகிய கீர்த்திவர்த்தனன் என்னும் சோழேந்திரன் மிக்க வணக்கமுடையவளும் சூரியசேகரன் என்னும் பாண்டியனின் மகளுமாகிய கமலினியென்னும் மனையாளுடனிச்சோழபூமியை நற்குணநற்செய்கைகளுடன் கூடியவனாக இருந்துகொண்டு, மந்திரிகளுடன் ஆண்டுவந்தான். பல சிவாலயங்களை ஜீர்ணோத்தாரணஞ் செய்தான். பலவற்றைப் புதிதாகவுங் கட்டினான். உண்மைப்பொருளமைந்த கீர்த்திசோழனென்னுமரசன் மிக்க பக்தியுடன் நல்ல புத்திரனைப்பெறுவதன்பொருட்டுக்கார்த்திகை மாதத்தில் ஷஷ்டீவிருதம் முதலியனவனுஷ்டித்துக்கொண்டு முருகனை வழிபட்டு வந்தான். அப்பொழுது குமரன் கனவிற் றோன்றி அமிர்தம் பொழியும் மொழியுடன் கூறலானார்.

ஸ்கந்தர்:— ஏ சோழமன்னனே! நீயும் உன் மனையாளும் பக்தியுடன் அனுஷ்டித்துவந்த விருதங்களினால் சந்தோஷமுற்றேன். சத்துருக்களை வெல்வதிலேயே விருப்பமுடையவனும் சோழவம்சத்தை உலகில் நிலை நாட்டக்கூடியவனும் விஜயசோழனென்னும் பெயர்பெற்றவனுமாகிய மகனொருவனுதிப்பான். தஞ்சைமாநகரில் கோங்கணேசராலயத்தின் நைருதிதிசையில் குஹபர்வதமென்னும்என்னுடையவோராலயம்பாழடைந்திருக்கிறது. ஏ அரசசிரேஷ்டனே! நீ அதனை ஜீர்ணோத்தாரணஞ்செய்வாயாக. அங்கு மிக்க பரிசுத்தமானதொரு கிணறு இருக்கின்றது. அதற்

குச் சக்திரூபமெனப்பெயர் அக்ரூபத்தில் ஷஷ்டியன்று முழுகுவதனால் மக்களில்லாதோர் மக்களைப்பெறுவர். கார்த்திகை மாதத்திற் கிருத்திகையன்று அங்கு என்னைக் காண்பாயாக அதனால் எல்லா விருப்பங்களையுமடைவாய். உனக்கோர் நல்ல பிள்ளையுமுதிக்கும்.

இவ்வாறு கூறி கந்தர் மறைந்தார். அரசன் காலையிலெழுந்து பூமிக்குள் மறைந்திருக்கும் அஜ்ஜீரணமான ஆலயத்தைப்பார்த்து வருமாறு மந்திரிகளை உத்திரவிட்டான். பிறகு சிறந்த சிற்பிகளை கொண்டவ்வாலத்தைப் படிக்கட்டுகளுடன் உயரமாக நிர்மாணம் செய்தான். கீர்த்திபெற்றவம்மன்னனக் கிணற்றையும் புதுப்பித்தான் அவ்வரசன் ஷஷ்டியன்று மயில் வாகனத்தில் வீற்றிருக்கும் ஸ்கந்தரைக் கண்ணுற்றுத் துதிக்கலானான்.

கீர்த்திசோழன்:— சக்தியைக்கையிலேந்தியவரே உம்மை வணங்கினேன். ஆறுமுகமுடையீரே! குஹரே! சூரனை வதைத்தவரே! ஸர்வதேவர்களையுங்காற்றவரே! சேனைத்தலைவரே! உம்மை வணங்கினேன்.

பிரணவரூபியே! மந்திரங்களெல்லாவற்றிற்கும் குருவே கார்த்திகேயரே உம்மை வணங்கினேன்.

எல்லோரையுமாணையிடுவோரே! கங்கையின் குமாரரே! தாமரைமலர் அணிந்தவரே! சிறந்த ஆடையாபரணங்கள் தரித்தவரே! பார்வதியின் புத்திரரே! உம்மை வணங்கினேன்.

இவ்வாறு தோத்திரம்செய்யவே அவன்முன் குஹன்தோன்றி வார்த்தைக் கூறலானார். (தொடரும்)

N. வைத்தியநாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை.

---

## திதி நிர்ணயகாரிகை

(ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் இயற்றியது.)

**जगद्गुरुं नमस्कृत्य कमलागृहमेधिनम् ।**
**करोमि महतां प्रीत्यै श्राद्धार्हतिथिनिर्णयम् ॥**

இலக்ஷ்மீதேவியுடன் கிரஹஸ்தாசிரமத்தை அவலம்பித்து அவ்வாசிரமத்திற்குரிய ஸகல தர்மங்களையுமுபதேசித்தும், தான்

நடத்தியும், நடப்பிவித்தும், ஜகத்குருவாய் விளங்கும் பகவானை நமஸ்கரித்து, மஹான்களது பிரீதிக்காக சிராத்தத்திற்குரிய திதிநிர்ணயத்தைச் செய்கிறேன். 1

सौरेण वाथ चान्द्रेण मानेनैकेन केनचित् ।
पूर्वैराचरितेनैव व्रतश्राद्धादिकं चरेत् ॥ २ ॥

காலத்தின்மானம், மானவம், (மனுக்களுடையது) தைவம், பார்ஹஸ்பத்தியம், பைத்ரம், (பித்ருக்களுடையது) நாக்ஷத்திரம் ஸௌரம், சாந்திரம், ஸாவனம், பிராமம் என்பதாக ஒன்பது விதமாய் பிரிக்கப்பட்டிருப்பினும், அதனுள்பிரதானமாக ஸௌர மானத்தைக்கொண்டோ, அல்லது சாந்திரமானத்தைக்கொண்டோ தங்களது முன்னோர்களால் ஆசரிக்கப்பட்டுவந்தபடிதான் விரதம், சிராத்தம், முதலியவற்றை ஆசரிக்கவேண்டும். 2

कुलाचारानुरोधेन देशधर्माननुव्रजेत् ।
कुलाचारपरित्यागी पङ्किलां गतिमश्नुते ॥ ३ ॥

முன்னோர்கள் ஆசரித்துவந்தபடிதான் ஆசரிக்கவேண்டுமென்பதற்குக் காரணத்தைக் கூறுகின்றார்.— தங்களது குலாசாரத்தை அனுஸரித்துத்தான் தேசதர்மங்களை நடத்திவரவேண்டும். குலாசாரத்தை விட்டவன் தோஷமுள்ள கதியை அடைவான். 3

यदा यत्राऽऽचरेत्कर्म तत्र तन्निकटेऽपि वा ।
गणितं यत्तु पञ्चाङ्गं तेन तत्तत्समाचरेत् ॥ ४ ॥

எப்பொழுது எந்ததேசத்தில் கர்மாவைச்செய்கிறானோ! அந்த தேசத்திலாவது, அதற்கு சமீபத்திலாவது, அந்த தேசத்திற்காக வென்று எந்தப்பஞ்சாங்கம் கணிக்கப்பட்டதோ, அப்பொழுது அந்தப் பஞ்சாங்கத்தில் கண்ட திதி முதலியவைகளை அனுசரித்தே அந்த தேசத்தில் கர்மாக்களைச் செய்துவரவேண்டும். 4

देशान्तरैस्तथाऽक्षांशै भिन्नास्तिथ्यादिनाडिकाः ।
अतस्स्याद्देशभेदेन तिथ्यादीनां विभिन्नता ॥ ५ ॥

ஏனெனில்— இலங்கையின் ஸ்தானத்தினின்று உஜ்ஜயினீ நகர் வழியாக மேருபர்வதம் செல்லும் ரேகைக்கு ஸமபூமத்திய ரேகையென்றுபெயர். அந்தரேகைக்குக்கிழக்குதிக்கிலோ, மேற்கு திக்கிலோ, தான் வசிக்குமிடம் எவ்வளவு தூரமுள்ளதாயிருக்கி

றதோ, அதற்குத் தக்கபடிக்கும், இலங்கையிலிருந்து வடக்கே எவ்வளவு அக்ஷாம்சம் தள்ளியிருக்கிறதோ, அதற்கேற்றபடிக்கும் திதி முதலியவற்றின் நாழிகை விநாடிகைகள் வெவ்வேறுபட்டனவாயிருக்கும். அதனால் தேசபேதத்திற்குத் தக்கபடி கர்மாவுக்குரிய திதியாதிகளும் மாறுபடும். அதனால் எவன் எந்த தேசத்தில் வசிக்கிறானோ அவன் அந்த தேசத்திற்காகவென்று கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தை அனுசரிக்கவேண்டும். 5

## राहुदर्शनतोऽन्यत्र दृक्सिद्धानेष्यते तिथिः ।

சூரியகிரஹணகாலந்தவிர மற்ற காலத்தில் திருக்கு ஸித்தமான திதி கோரப்படுவதில்லை. அதாவது— இங்கு திருக்ஸித்த திதி என்று கூறினபடியால் திதி முதலியன திருக்ஸித்தமென்றும், திருக்ஸித்தமல்லாததென்றும் இருவகைப்பட்டதாகத் தெரிகிறது சாஸ்திரப்படி கணித்துவந்த கிரஹங்கள் நமது கண்கொண்டு பார்க்கும்போது அதே இடத்திலிருப்பதாகக்காணப்பட்டால் நமது பார்வைக்கும் கணிதத்திற்கும் ஒற்றுமையிருப்பதுபற்றி அந்தக் கிரஹங்கள் திருக்ஸித்த கிரஹங்களாகும். அந்தக் கிரஹங்களுடைய திருக்ஸித்த கதியைக்கொண்டு ஸாதிக்கப்பட்ட திதியாதிகள் திருக்ஸித்ததிதியாதிகளாகும். அப்படியல்லாதது திருக்ஸித்தமில்லாதவையாகும். அந்த திருக்ஸித்த திதியாதிகளும்பூமத்திய திருக்ஸித்தமென்றும் பூபிருஷ்டதிருக்ஸித்தமென்றும் இருவகைப்படும். பூமத்தியத்திலிருந்து ஒருவன் பார்ப்பதனால் அந்தப்பார்வைக்கு ஒத்துவருவது பூமத்திய திருக்ஸித்தமாகும். பூபிருஷ்டத்திலிருந்து அதாவது பூமியின் மேல்புறத்திலிருந்து பார்ப்பவனது பார்வைக்கு ஒத்துவருவது பூபிருஷ்டதிருக்ஸித்தமாகும். இங்குசிராத்தார்ஹ திதிக்கு திருக்ஸித்தி கூடாதென்று கூறியிருப்பது ஒருவிதமான திருக்ஸித்தியும் கூடாதென்று கருத்தை உடையதா? அல்லது பூபிருஷ்ட திருக்ஸித்தி மாத்திரம் கூடாதென்று கருத்தையுடையதா? என்று விசாரிக்கவேண்டும். இந்த விசாரணையில் பூர்வபக்ஷிகளது ஆசங்கைகளையெடுத்துக்காட்டி அவைகளுக்கு ஸமாதானம் ஸ்ரீ பாஸ்கராசாரியாரவர்களால் இயற்றப்பட்ட பீஜோபநயம் என்ற கிரந்தத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது.

(தொடரும்)

பத்திராதிபர்.